**OS.3/2023**

**நாள். 30.10.2025**

**வா.சா.1 – மன்சூர்அலி**

<u>1, 8 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் பாட்டிக்கு உள்ள பாகத்தில் எனக்குள்ள பாகத்தை கேட்டு வழகக்கு தாக்கல் செய்துள்ளேன். 1, 8 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில் என்ன எதிர்வாதம் செய்து வருகிறார்கள் என தெரிந்து கொண்டேனா என்றால தெரிந்து கொண்டேன். அவர்கள் என் பாட்டிக்கு சொத்தில் பாத்தியம் இல்லை என எதிர்வாதம் செய்து வருகிறார்கள். நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் சர்வே எண்.53/5A என்ற சொத்து பல உட்பிரிவுகளாக ஆகியுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் 1ம் பிரதிவாதி கடை கட்டியுள்ளார் என்றும், 2 மற்றும் 8ம் பிரதிவாதிகள் வீடு கட்டியுள்ளார்கள் என்றும், அமீர்அலி என்பவரும் வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். அமீர்அலி வீட்டிற்கு அடுத்து ஆக்கில்சாதிக் என்பவரும் வீடு கட்டி வருகிறார் என்றால் சரிதான். அமீர்அலி மற்றும் ஆக்கில்சாதிக் ஆகிய இருவரையும் வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் கட்டிடங்கள் இருப்பதாக வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், வழக்கு செய்யும் காலத்தில் காலியிடமாகத்தான் இருந்தது. தாவா சொத்து வழக்கு தாக்கல் செய்யும் காலத்தில் காலியிடமாகத்தான் இருந்தது என என் வழக்குரையிலோ, நிருபணவாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதியான சித்திபரிதா வழக்கு சொத்தில் வீடுகட்டி சுமார் 20 வருடத்திற்கும் மேல் ஆகிறது என்றால் சரிதான். அமீர்அலி வழக்கு சொத்தில் வீடுகட்டி சுமார் 20 வருடத்திற்கும் மேல் இருக்கும் என்றால் சரியல்ல, நான் வழக்கு தாக்கல் செய்த காலத்தில்தான் வீடு கட்டிக்கொண்டிருந்தார். வழக்கு தாக்கல் செய்யும்ம காலத்தில் 1ம் பிரதிவாதி அக்பர் அலியும், 8ம் பிரதிவாதி ஹசரத்துல்

பசிகாவும் வீடு கட்டிக்கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி விவரத்தை வழக்குரையில் சொல்லாமல்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தெரியாது. வழக்கு சொத்தும் அத்துடன் இதர பகுதி சொத்தும் ஆரம்பத்தில் சவர்மைதீன், குப்பை, பாத்தம்பீவி, சாகுல்ஹமீது ஆகியோர்களுக்கு பாத்தியமாக இருந்தது என வழக்குரையில் சொலலியுள்ளேன், ஆனால் அவர்களது வாரிசுளை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான், தாவா சொத்து என் பாட்டிக்கு மட்டும் பாத்தியமான சொத்து என்பதால் அவர்களை தரப்பினர்களாக சேர்க்கவில்லை. சவர்மைதீனுக்கு முகைதீன், ஆராம்மாள், மகரிபா ஆகியோர்கள் மக்கள் என்றால் சரிதான். அவர்களுக்கும் பலவாரிசுகள் உள்ளனர் என்றால் சரிதான். பாத்தம்பீ என்ற சீனி இப்ராகிம் சாகிபிற்கு சேகு மகன் என்று சொன்னால் சரிதான். அவர்களுக்கும் வாரிசுகள் உள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். குப்பை என்பவருககு சீனிஅகமது, முகைதீன் மிதார், மைமூன்பீவி ஆகியோர்கள் மக்கள் ஆவார்கள். அவர்களுக்கும் பல வாரிசுகள் இருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். நான் சொன்ன முந்தைய மூதாதையரான சாகுல் ஹமீது யார் என்று எனக்கு தெரியாது. அவருக்கு வாரிசுகள் இருந்து வருகிறார்களா என்றால் தெரியாது. தாவா சொத்தில் சவர்மைதீன், பாத்தம்பீ, குப்பை மற்றும் சாகுல்ஹமீது ஆகிய நால்வரும் எந்தவித உரிமையும் கோரவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை பொறுத்தும், இதர பகுதி சொத்தை பொறுத்தும் வா.சா.ஆ.2 மூலம் வள்ளியம்மாளுக்கு சவர்மைதீன், பாத்தம்பீ என்ற சீனிஇப்ராகிம் சாகிபு மகன் சேகு மற்றும் குப்பை ஆகிய மூவரும் கிரையம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 கிரையப்பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ள நான்குமால்களை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அந்த நான்குமாலில் வடக்கே சீனி முகம்மது நிலம், கிழக்கே வள்ளியம்மாள் நிலம், தெற்கே செய்யது அகமது நிலம், மேற்கே எங்கள் நிலமும் எங்களால் விடப்பட்ட தென்வடல் பாதையும் என குறிப்பிட்டு எழுதிக்கொடுக்கப்பட்டிருக்கிறது

என்றால் சரிதான். வழக்குரையில் நான்குமாலில் தென்வடல் பாதைக்கும் கிழக்கே என குறிப்பிட்டுள்ள சொத்துதான் வா.சா.ஆ–2 ஆவணத்தில் மேற்கு நான்குமாலாக காண்பிக்கப்பட்டுள்ள சொத்து என்றால் சரிதான். வா.சா.ஆ–2 ஆவணத்தில் மேற்கு நான்குமாலாக காண்பிக்கப்பட்டுள்ள சொத்தைத்தான் குப்பை, சவர்மைதீன், சேகு ஆகியோர்கள் சேர்ந்து இராமலிங்கத்திற்கும், சாகுல் ஹமீதுக்கும் 18.08.1961ல் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்து பெறப்பட்ட கணினி கிரயப்பத்திரத்தில் நகல் 18.08.1961 கிரையப்பத்திரத்தின் நகல் என்றால் சரிதான். அந்த கிரையப்பத்திரத்தின் நகல் **பி.வா.சா.ஆ–1**. வா.சா.ஆ–2 கிரைய ஆவணத்தில் மேற்கு நான்குமாலாக காண்பிக்கப்பட்ட சொத்து தான் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்ட சொத்து என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் தெற்கு நான்குமாலாக சாகுல்ஹமீது கிரையநிலம் என காட்டப்பட்டுள்ளது என்றால் தவறுதலாக காட்டப்பட்டுள்ளது. அந்த சொத்துதான் சர்வே எண்.53/2ல் கண்ட சொத்து என்றால் சரிதான். நான் பாத்தம்பீ என்கிற சீனி இப்ராகிம்சா சாகிப் மகன் சேகுவின் மகள் சைமாபீவிக்காக இராமநாதபுரம் மாவட்ட உரிமையில் நீதிமன்றத்தில் O.S.NO.27/2025 வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வழக்குரை நகல் O.S.NO.27/2025 வழக்குரையின் நகல் என்றால் சரிதான். அது **பி.வா.சா.ஆ–2**. நான் வழக்கில் சொல்லியுள்ள சவர்மைதீன், குப்பை, சாகுல் ஹமீது, பாத்தம்பீ என்கிற சீனி இப்ராகிம்சா சாகிபு ஆகிய நால்வரும் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் அல்ல என்றால் சரிதான். அவர்கள் நால்வருக்கும் வள்ளியம்மாளுக்கு கிரையம் கொடுத்த சொத்து எப்படி பாத்தியம் என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்சொன்ன சவர்மைதீன், குப்பை, சாகுல் ஹமீது, பாத்தம்பீ என்கிற சீனி இப்ராகிம்சா சாகிபு ஆகிய நால்வரும் பாகம் பிரித்துக்கொண்டதற்கான ஆவணங்கள் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. மேற்படி தாவா சொத்து குப்பை அவர்களுக்கு பாகத்தில் ஒதுக்கப்பட்டதாக நான்

எந்தவித ஆவணமும் பார்க்கவில்லை என்றால் சரிதான். தாவா வழக்கில் குப்பை என்பவருககு யார்யார் வாரிசுகள் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். குப்பை என்பவர் ஆசியாமரியத்திற்கு எந்த ஆவணமும் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரிதான், ஆனால் வாய்மொழியாக சொல்லியுள்ளார். ஆசியாமரியத்திற்கு எந்த தேதியில் யார் முன்னிலையில் வாய்மொழி இனாமாக கொடுக்கப்பட்டது என்ற விவரத்தை எனது வழக்குரையிலோ, நிருபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. யார் முன்னிலையில் வாய்மொழி இனாமாக கொடுத்துள்ளார் என்ற விவரத்தை எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்கு ஆசியாமரியம் மற்றும் குப்பை பெயரில் பட்டா இல்லை என்றால் சரிதான். ஆசியாமரியத்திற்கு 5 பேர் வாரிசுகள். அந்த விவரத்தையும் எனது வழக்குரையிலோ, நிருபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். குப்பை எந்த ஆண்டு இறந்தார் என்ற விவரத்தை எனது வழக்குரையிலோ, நிருபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். ஆசியாமரியத்தின் 5 பிள்ளைகள் தாவா சொத்தை பாகம் பிரித்துக்கொண்டார்கள் என சொல்லவில்லை என்றால் சரிதான். ஆசியாமரியம் என் அப்பாவான அப்துல் ஹமீதுக்கு கிரையமோ, இனாமோ, விடுதலை ஆவணமோ எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரிதான். என் தகப்பனாருக்கும் ஆசியாமரியம்வாய்மொழிஇனாமாக வழக்கு சொத்தை கொடுத்ததாக எனது வழக்குரையிலோ, நிருபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் தகப்பனாருக்கு எந்த தேதியில், யார் முன்னிலையில் வாய்மொழிஇனாமாக என் பாட்டி ஆசியாமரியம் கொடுத்தார் என சொல்லவில்லை என்றால் சரிதான். என் தகப்பனாருக்கு 5 பிள்ளைகள். தாவா சொத்துக்கு என் தகப்பனார் அப்துல் ஹமீது பெயரில் பட்டா ஏற்படவில்லை என்றால் சரிதான். என் தகப்பனாருக்கு 5 பிள்ளைகள் உள்ளார்கள், அவர்களை இந்த வழக்கில் நான் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். என்

தகப்பனார் தாவா சொத்தை எப்போது எனக்கு இனாமாகவோ, கிரையமாகவோ கொடுத்தார் என வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்கு என் பெயரில் பட்டா இல்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்கு நான் பட்டா கேட்டு எந்த மனுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, கொடுத்துள்ளேன். அவ்வாறு கொடுத்ததாக சொல்லி நான் நீதிமன்றத்தில் எந்த மனுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ–2 ஆவணத்தின் மூலம் தாவா சொத்தையும் அதன் தென்புறம் உள்ள சொத்தையும் வள்ளியம்மாள் பாத்தியம் அடைந்து அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். வழக்குரை பத்தி 5ல் சொல்லப்பட்டுள்ள பிரகாரம் வள்ளியம்மாள் தாவா சொத்தையும், அதன் தென்புறம் உள்ள சொத்தையும் பலநபர்களுக்கு கிரையம் கொடுத்துள்ளார் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகளுக்கு வள்ளியம்மாள் தாவா சொத்து மற்றும் அதனுடன் சேர்ந்த 1 ஏக்கர் 25 சென்டு நிலத்தை 20.09.1990ம் தேதி கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த 1 ஏக்கர் 25 சென்டு நிலத்தை 1ம் பிரதிவாதி அக்பரும், அவரது சகோதரியான 2ம் பிரதிவாதி சித்தி பரிதாவும் தலா 62.5 சென்டு வீதம் சரிபாதியாக பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. சித்தி பரிதா தனக்கு பாகமாக கிடைத்த 62.5 சென்டை பொறுத்து 3 முதல் 7 பிரதிவாதிகளுக்கு இனாம் செட்டில் மென்ட் எழுதிக்கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சித்தி பரிதாவுக்கு ஒதுக்கப்பட்ட சொத்திற்கு மேல்புற சொத்தை எனது வழக்குரை பத்தி 8, 9, 10, 11ல் சொல்லியுள்ள பிரதிவாதிகளுக்கு கிரையம் மற்றும் இனாம் கொடுத்துள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்து மற்றும் அதன் தென்புறம் உள்ள சொத்துக்கு UDR காலத்தில் சர்வே எண்.53/5 ஏ என உட்பிரிவு செய்யப்பட்டு வள்ளியம்மாள் பெயரில் பட்டா ஏற்பட்டிருந்தது என்றால் சரிதான். அதை ஆட்சேபித்து நான் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் பட்டா மாறியுள்ளது தெரியவில்லை என்பதால் ஆட்சேபித்து நடவடிக்கை எடுக்கவில்லை. வள்ளியம்மாள் 1, 2

பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்ததின் அடிப்படையில் 1 ஏக்கர் 25 சென்டு நிலத்திற்கு சர்வே எண்கள். 53/5ஏ1ஏ என்றும், 53/43 என உட்பிரிவு செய்யப்பட்டு 1, 2 பிரதிவாதிகளுக்கு பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் வடமேற்கு மூலையில் 1ம் பிரதிவாதி தனது மகளான 8ம் பிரதிவாதிக்கு 26.02.2019ம் தேதி 5 சென்டு அளவுள்ள சொத்தை இனாம் செட்டில்மென்ட் எழுதிக்கொடுத்து பாத்தியம் செய்து கொடுத்துள்ளார் என்றால் தெரியாது. அந்த சொத்தை 8ம் பிரதிவாதி சுற்றுசுவர் எழுப்பி வீடு கட்டி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி 9ம் பிரதிவாதிக்கு வழக்குச் சொத்தில் 10 சென்டு நிலத்தினை கிரையம் கொடுத்து 9ம் பிரதிவாதி வேலி அடைத்து அனுபவம் செய்து வருகிறார் என்றால் தெரியாது. 9ம் பிரதிவாதிக்கு சர்வே எண்.53/5ஏ1ஏ3 என உட்பிரிவு செய்யப்பட்டு பட்டா எண்.5192 என பட்டா ஏற்பட்டு அனுபவம் செய்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. 10ம் பிரதிவாதிக்கு 1ம் பிரதிவாதி கிரையம் கொடுத்த சொத்துக்கு உட்பிரிவு செய்யப்பட்டு சர்வேஎண். 53/5ஏ1ஏ2 என உட்பிரிவு செய்யப்பட்டு பட்டா எண்.5191 ஆக பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் 1ம் பிரதிவாதி 11ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த சொத்திற்கு உட்பிரிவு செய்யப்பட்டு சர்வே எண்.53/100 என உட்பிரிவாகி பட்டா எண்.5681 என பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 10ம் பிரதிவாதி தான் கிரையம் பெற்ற சொத்தை சுற்றி மட்டைவேலி அமைத்து அனுபவம் செய்து வருகிறார் என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதி தான் கிரையம் கொடுத்த சொத்துக்கள் போக மீத சொத்தில் தென்னைமரங்கள் வைத்து அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். நான் பெரியபட்டினம் கிராமத்தில்தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். வள்ளியம்மாள் தான் கிரையம் பெற்ற சொத்தில் அவர் பல நபர்களுக்கு கிரையம் கொடுத்து கிரையம் பெற்ற நபர்கள் வீடு கட்டி அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். கிரையம் பெற்று அனுபவித்து வருபவர்களை தரப்பினர்களாக சேர்த்து அவர்களின் உரிமை மற்றும் அனுபவத்தை

ஆட்சேபித்து நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். வள்ளியம்மாளுக்கு குப்பை, சவர் மைதீன், பாத்தம்பீ என்கிற சீனி இப்ராகிம்சா சாகிபு மகன் சேகு ஆகியோர்கள் கிரையம் கொடுத்த விவரம் ஏற்கனவே எனக்கு தெரியும் என்றால் சரிதான். எனக்கு 16.10.2022ம் தேதிதான் வள்ளியம்மாள் கிரையம் கொடுத்த விவரம் தெரியும் என வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தின் நகலை 03.08.2020ம் தேதியிலேயே பெற்றுள்ளேன் என்றால் சரிதான். அதனால் 16.10.2022ம் தேதியில்தான் வள்ளியம்மாள் கிரையம் கொடுத்த விவரம் எனக்கு தெரியும் என சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. தாவா சொத்து மற்றும் இதர பகுதி சொத்தையும் வள்ளியம்மாளுக்கு சவர்மைதீன் வகையறா வா.சா.ஆ.2 ஆவணம் மூலம் கிரையம் கொடுத்து விட்டதால் அவர்களது வாரிசுகளை தரப்பினர்களாக சேர்க்காமல் பணம் பறிக்கும் நோக்கத்துடன் இந்த பிரதிவாதிகளை தரப்பினர்களாக சேர்த்து இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்த வள்ளியம்மாளையோ, அவரது வாரிசுகளையோ தரப்பினர்களாக சேர்த்து வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதனால் தாவா சொத்தை பொறுத்துவழக்குரையில் கேட்டுள்ள எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு எவ்வித உரிமையோ, அனுபவமோ இல்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக ஆவணம் தாக்கல் செய்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் வழக்கில் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.